ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2024.10.15 |


# இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2024 செத்தெம்பர்


**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2024 செத்தெம்பரில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன**

**தயாரிப்பு கொ.மு.சு 54.1**
**2024 செத்தெம்பர்**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2024 செத்தெம்பரில் 54.1 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறைவடைந்த வேகத்திற்கு மத்தியில் தயாரித்தல் நடவடிக்கைகளில் தொடர்ச்சியான விரிவடைதலை இது எடுத்துக்காட்டுகின்றது. தொழில்நிலை தவிர அனைத்து துணைச் சுட்டெண்களும் மாதகாலப்பகுதியில் நடுநிலையான அடிப்படை அளவுமட்டத்திற்கு மேல் காணப்பட்டன.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றின் விரிவடைதல்களுக்கு உணவு மற்றும் குடிபானங்கள் தயாரித்தல் துறை காரணமாக அமைந்தன. இதற்கு மேலதிகமாக, மாதகாலப்பகுதியில் கொள்வனவுகளின் இருப்பு அதிகரித்து, வரவிருக்கும் பண்டிகைப் பருவகாலத்தினை நோக்கி உத்தேசிக்கப்பட்ட கையிருப்புத் திரட்டல் மூலம் தூண்டப்பட்டிருந்தது. தொழில்நிலையானது செத்தெம்பரில் மெதுவான வேகமாயினும் சுருக்கமடைந்து காணப்பட்டது. அதேவேளை, நிரம்பலர்களின் விநியோக நேரம் மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் நீட்சியடைந்தது.

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*கொமுசு தொகுப்பு - தயாரிப்பு அளவீடு*

| மாறி | ஓகத். | செத் | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரிப்பு** | **55.5** | **54.1** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 58.5 | 57.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| உற்பத்தி | 59.5 | 53.0 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 45.0 | 47.0 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 56.0 | 57.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 56.2 | 56.7 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கை ஆண்டு இறுதிப் பருவகாலக் கேள்வி பற்றிய சாதகமான எண்ணப்பாங்கினால் பெருமளவில் தூண்டப்பட்டு சாதகமாகக் காணப்படுகின்றது.

**உலகளாவிய தோற்றப்பாடு:**

**கொமுசு தயாரிப்புத் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| **உலகம்** | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| **இந்தியா** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **சீனா** | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| **ஐக்கிய அமெரிக்கா** | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| **ஐக்கிய இராச்சியம்** | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| **யூரோ வலயம்** | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 ஒத்தோபர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1] எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொ.மு.சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), வியாபார நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 செத்தெம்பரில் 53.4 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.** முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் பணிகள் நடவடிக்கைகளில் மெதுவான விரிவடைதலினை இது எடுத்துக்காட்டுகின்றது.

வியாபார நடவடிக்கைகளில் விரிவடைதலானது முக்கிய துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளினால் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, கடன்வழங்கல் நடவடிக்கைகளைத் தூண்டிய நிலவிய சாதகமான வட்டி வீதங்களினால் பெருமளவில் இயக்கப்பட்டு நிதியியல் பணிகளின் வியாபார நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினை அனுபவித்தன. மேலும், கல்வி, தொழில்சார் பணிகள், நிகழ்ச்சித்தாயரிப்பு மற்றும் ஒலிபரப்பு, உண்மைச் சொத்து, போக்குவரத்து என்பவற்றின் வியாபார நடவடிக்கைகளும் மாதகாலப்பகுதியில் வளர்ச்சியடைந்தன. எவ்வாறாயினும், மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், தகவல்தொழில்நுட்ப செய்நிரலாக்கம் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் ஆகியவற்றின் வியாபார நடவடிக்கைகள் முன்னைய மாதத்திலிருந்து மாற்றமின்றிக் காணப்பட்ட அதேவேளை அனைத்து வேறு துறைகளின் நடவடிக்கைகளிலும் வீழ்ச்சிகள் பதிவாகின.

புதிய வியாபாரங்கள், குறிப்பாக நிதியியல் பணிகள் நடவடிக்கைகளில் அவதானிக்கப்பட்ட விரிவடைதல்கள் மூலம் செத்தெம்பரில் அதிகரித்தன.

அதேவேளை, தொழில்நிலை செத்தெம்பரில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது. மேலும், நிலுவையிலுள்ள பணிகள் முன்னைய மாதத்தில் பதிவாகிய மேம்பாடொன்றின் பின்னர் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் குறைவடைந்தன.

***கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு***


| மாறி | ஓகத். | செத். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **65.2** | **53.4** | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 61.2 | 53.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 48.0 | 48.5 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 51.1 | 48.5 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 68.8 | 72.4 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் மேம்பட்டன.

**கொ.மு.சு**
**பணிகள்**
**வியாபார நடவடிக்கைச் சுட்டெண்**
**2024 செத்தெம்பர்**
**53.4**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 ஒத்தோபர் 15 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு =50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.